

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. சபா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ , தொகுதி பொறுப்பாளர்கள் , இள.புகழேந்தி, சுபா .சந்திரசேகர் செந்தமிழ்ச்செல்வன், முன்னிலை வகித்தனர். தலைமை செயற்குழு சா .இராசா வன்னியன், வி கே வெங்கட்ராமன், பாவாடை கோவிந்தசாமி, பொருளாளர் ஜி. தண்டபாணி ,ஒன்றிய குழு தலைவர் சபா .பாலமுருகன், நகர மன்றத் தலைவர் க.இராஜேந்திரன் உள்ளிட்ட மாநில மாவட்ட ,ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள் ,ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட சார்பணி நிர்வாகிகள்,வாக்குச்சாவடி முகவர்கள், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் கழக தலைவர் தளபதியார் அவர்களின் பிறந்தநாளை வெகு சிறப்பாக கொண்டாடுவது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தூத்துக்குடி மாவட்டம் கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் அவர்களின் திருவுருவச் சிலையை காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்ததை தொடர்ந்து, அவரது மணிமண்டபத்தில் கல்வெட்டை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் மாவட்டச் செயலாளர் திருமதி பெ.கீதாஜீவன் திறந்து வைத்தார். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் ஜீ.வி. மார்கண்டேயன், எம்.சி. சண்முகையா, ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் ரமேஷ், துணைத் தலைவர் காசி விஸ்வநாதன், ஓட்டப் பிடாரம் ஒன்றியச் செயலாளர் இளையராஜா, மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்து தலைவர் சரவணக்குமார் உள்ளிட்டோர் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### இரண்டு வருடத்தில்

# ஒரு மாவட்டத்தில் ஏழு கல்லூரிகளை கொடுத்த ஒரே முதல்வர்!

## அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!



சின்னாளபட்டி, பிப். 29 -
இந்தியாவிலேயே பெண்களுக்கு பாதுகாப்பான கல்வி வழங்குவதில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது கன்னிவாடி பேரூராட்சி மு.ரெ.பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.1 கோடியே 83 லட்சம் மதிப்பில் ஆய்வக வசதியுடன் கூடிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். 2வருடத்தில் ஒரு மாவட்டத்திற்கு 7 கல்லூரிகளை கொடுத்த ஒரே முதல்வர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் என அமைச்சர் ஐ.பெரியசாமி மாணவிகள் மத்தியில் பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் நவாப்பட்டியில் உள்ள மு.ரெ.அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.1கோடியே 83லட்சம் மதிப்பில் ஆய்வகங்களுடன் கூடிய புதிய கட்டிடங்களுக்கான ஆயத்தப் பணி நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் மொ. ந.பூங்கொடி தலைமை தாங்கினார். பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ரா.மனோரஞ்சிதம் வரவேற்று பேசினார். திண்டுக்கல் எம்.பி.ப. வேலுச்சாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தண்டபானி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, கன்னிவாடி பேரூராட்சி மன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம், பேரூர்கழக செயலாளர் இளங்கோவன், முன்னாள் செயலாளர் வழக்கறிஞர் சண்முகம் பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் கே.டி. ராஜசேகர், ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் கலந்துகொண்டு பணிகளை துவக்கி வைத்த பின்பு மாணவிகள் மத்தியில் பேசிய தி.மு.க. மாநில துணைப்பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களும் இந்தியாவிலேயே பெண்களுக்கு பாதுகாப்பான கல்வி வழங்குவதில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. திமுக ஆட்சியின் போது ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் மருத்துவக்கல்லூரி கொண்டுவர திட்டமிட்டு ஆட்சி மாற்றத்தினால் திண்டுக்கல்லுக்கு சென்றது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்த போது ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்தில் அறிஞர் அண்ணா பொறியியல் கல்லூரி கொண்டுவரப்பட்டது. அதன்பின்னர் 10 வருடங்களாக ஆட்சியில் இருந்த மாற்று அரசாங்கம் எந்த ஒரு நலத்திட்டமும் ஆத்தூர் தொகுதி யில் கொண்டுவரவில்லை. மீண்டும் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்தவுடன் ஆத்தூர் ஒன்றியத்தில் கூட்டுறவுத்துறை சார்பாக கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும் கொண்டுவரப்பட்டது. இதுமட்டுமின்றி திண்டுக்கல் மாவட்டத்தில் 2வருடத்தில் 7 கல்லூரிகளை தமிழக முதல்வர் நமக்கு தந்துள்ளார் என்றார். பள்ளி மாணவிகள் தங்களுக்கு விளையாட்டு மைதானம் வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளீர்கள் விரைவில் உங்கள் கோரிக்கை நிறைவேற்றி கொடுக்கப்படும். விளையாட சென்றுவிட்டு வரும் மாணவர் படிக்கும் படிப்பு தான் மனதில் பதியும் இதை உணர்ந்துதான் ஒவ்வொரு பள்ளியிலும் விளையாட்டிற் கென தனி வகுப்புகள் உள்ளன. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு தமிழக விளையாட்டு வீரர்கள் இந்தியா அளவில் பெயர் பெற்றுள்ளனர். விரைவில் தமிழக விளையாட்டு வீரர்கள் உலக அளவில் விளையாடும் அளவிற்கு தகுதி பெறுவார்கள் என்றார். இப்பள்ளியில் படிக்கும் மாணவி யர்கள் 100சதவீதம் தேர்ச்சி பெற்று உங்களுக்கென ஒரு பைசா கூட வாங்காமல் கல்லூரி படிப்பு வழங்க காத்திருக்கும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சேர்ந்து உயர்நிலையை அடைய வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார். நிகழ்ச்சியில் பேரூராட்சியின் உதவி செயற்பொறியாளர் வீ.வெற்றிச்செல்வி, கன்னிவாடி பேரூராட்சி செயல் அலுவலர் ஜெயமாலு, பேரூராட்சிமன்ற துணைத் தலைவர் மு.கீதா முருகானந்தம், பொதுக்குழு உறுப்பினர் பெருமாள், அவைத் தலைவர் சர்புதீன், ரெட்டியார்சத்திரம் வட்டார காங்கிரஸ் தலைவர் நவாப்பட்டி முருகானந்தம், பள்ளி உதவி தலைமையாசிரியர் ஆரூரான், கன்னிவாடி பேரூராட்சி தலைமை எழுத்தர் வெள்ளையன், வார்டு உறுப்பினர்கள் மருதாயம்மாள், பாப்பத்தி, பிச்சைமுத்து, சித்ரா, உமா இந்திரா காந்தி, மகேஸ்வரன், கார்த்திகை செல்வி, சரண்யா, மற்றும் பேரூராட்சி மன்ற அலுவலர்கள், பணியாளர்கள் கலந்துகொண்டனர். நிறைவாக பள்ளி தலைமையாசிரியை செ.மகேஸ்வரி நன்றி கூறினார்.

### டாக்டர் கொ. நந்தகோபாலகிருஷ்ணன் தலைமை! சபா. இராசேந்திரன் முன்னிலை!

# கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம்!

## அமைச்சர் சி .வெ. கணேசன் சிறப்புரையாற்றினார்!

கடலூர் , பிப். 29 -
முதல்வர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்கவும், கழக இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுக்கு இணங்கவும், கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் நெய்வேலி சட்டமன்ற தொகுதி காடாம்புலியூர் ஏ.வி ,மகாலில் 27 .2. 2024 செவ்வாய்க் கிழமை காலை 11 மணியளவில் நடைபெற்றது ,.

மாவட்ட கழக அவை தலைவர் டாக்டர் கொ. நந்தா கோபாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், தொகுதி பொறுப்பாளர்கள் இள.புகழேந்தி, சுபா. சந்திரசேகரன், செந்தமிழ்ச்செல்வன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி .வெ. கணேசன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.

மாவட்ட பொருளாளர் ஜி. தண்டபாணி தலைமை செயற்குழு உறுப்பினர்கள் சா .இராச வன்னியன், வி கே. வெங்கட்ராமன், பாவாடை கோவிந்தசாமி, பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா. பாலமுருகன் பண்ருட்டி நகர மன்ற தலைவர் க.இராஜேந்திரன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய , நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ,நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள் ,ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், பூத் கமிட்டி நிர்வாகிகள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இச் செயற்குழு கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மா னங்கள் நிறைவேற்றப்பட்டது.

மார்ச் 1 அன்று பிறந்த நாள் காணும் கழகத் தலைவர் தமிழக முதல்வர் அண்ணன் தளபதியின் பிறந்த நாளை மாவட்டம் முழுவதும் ஒன்றியம் ,நகரம், பேரூர், கிளைக் கழகங்களின், சார்பாக இரு வண்ணக் கொடி ஏற்றி ஏழை எளியவர்களுக்கு அன்னதானம்,வேட்டி, சேலை , இனிப்புகள், வழங்குதல் பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியருக்கு நோட்டு புத்தகம் ,பேனா, பென்சில் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள், வழங்கி பிறந்த நாளை கொண்டாடுவது, என இந்த செயற்குழு தீர்மானிக்கிறது.

நாடு போற்றும் நல்ல தலைவர் தளபதியின் 2 .1/2 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை துண்டு பிரசுரங்களாக அச்சிட்டு வீதி வீதியாக இல்லங்கள் தோறும் சென்று விநியோகித்து சாதனைகளை விளக்கி திண்ணைப் பிரச்சாரம் செய்து இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் ஓங்கி ஒலிக்க அனைவரும் உழைப்பது என இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

வருகின்ற நாடாளுமன்ற தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியின் சார்பாக கடலூர் பாராளுமன்ற தொகுதியில் தலைமை கழகத்தால் அறிவிக்கின்ற வேட்பாளரை வெற்றி பெற செய்திட அனைவரும் அயராமல் உழைப்பது என இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

சென்னை மெரினா கடற்கரையில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா திருவுருச்சிலையையும் , எண்பது ஆண்டு காலம் தமிழர்களின் நல்வாழ்விற்கு உழைத்திட்ட உத்தம தலைவர் கலைஞரின் திருவுருவசிலையையும், நினைவிடங்களையும் சிறப்பாக சீர்மிகு கலைநயத்தோடு அமைத்து மக்களின் பார்வைக்கு வழிவகுத்திட்ட கழக தலைவர் உள்ளிட்ட அனைவருக்கும் இந்த செயற்குழு நன்றியை தெரிவித்துக் கொள்கிறது. உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### மதுரை வடக்கு – தெற்கு மாவட்டத்தில்

# கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் பி.மூர்த்தி – சேடப்பட்டி மு.மணிமாறன் அறிக்கை!





மதுரை, பிப். 29 -
திராவிட மாடல் ஆட்சி நாயகர் மக்கள் போற்றும் நம் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை மதுரை வடக்கு மற்றும் தெற்கு மாவட்டம் முழுவதிலும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி, கழகக் கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடும்படி மதுரை வடக்கு மாவட்ட செயலாளரும் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சருமான பி.மூர்த்தி, மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் ஆகியோர் தமது அறிக்கையின் மூலம் தெரிவித்துள்ளனர், அதன் விவரம் வருமாறு:

நாடு போற்றும் நம் தலைவர் தமிழ்நாட்டு மக்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை வழங்கி எல்லோருக்கும் எல்லாம் என்னும் திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு பொன்நாள், எனவே அன்நன்னாளில் கழகத்தினர் மாற்றுத்திறனாளிகள், முதியோர், ஏழை, எளியோர் என பலதரப்பினருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி, கிராமங்கள், நகரங்கள் என அனைத்து இடங்களிலும் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்க வேண்டும்.

மேலும் கழக அரசின் சாதனைகளை விளக்கும் வகையில் இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் எனும் வகையில் திண்ணை பிரச்சாரங்கள் செய்து கழக அரசிற்கு பெருமை சேர்க்க வேண்டும், மேலும் தெரு முனை பிரச்சார கூட்டங்களும் நடத்தி கழகத்தினர் சிறப்பாக செயலாற்ற வேண்டும் என கழகத்தினருக்கு மதுரை வடக்கு, தெற்கு மாவட்ட செயலாளர்கள், அமைச்சர் பி. மூர்த்தி, சேடப்பட்டி மு.மணிமாறன் ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### கழக பொதுச்செயலாளர் ஆலோசனை வழங்குகிறார்!

# வேலூர் மாவட்ட தி.மு.க.விற்கு உட்பட்ட 5 சட்டமன்றத் தொகுதிகளின் பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக்கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!



வேலூர், பிப். 29 -
2024 நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக்கூட்டம். கீழ்க்கண்ட நிகழ்ச்சிநிரலின்படி நடைபெற உள்ளது. இதுகுறித்து வேலூர் மாவட்டச் செயலாளரும், அணைக்கட்டு சட்டபேரவை உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தனது அறிக்கையின் வாயிலாக பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் காட்பாடி, வேலூர், அணைக்கட்டு, கீ.வ.குப்பம் மற்றும் குடியாத்தம் ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகளின் தொகுதி பார்வையாளர்கள், பாக முகவர்கள் (BLA 2) ஆலோசனைக் கூட்டம் கழக பொதுச்செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் ஆலோசனை கூட்டத்தில் கலந்துகொண்டு ஆலோசனை வழங்க உள்ளார்கள். எனவே மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் உரிய ஏற்பாடு செய்திட வேண்டி கேட்டுக்கொள்ளபடுகிறார்கள்.

நிகழ்ச்சி நிரல் 03.03.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கீ.வ.குப்பம் சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள் (BLA2) ஆலோசனைக்கூட்டம் குடியாத்தம் ராஜாகோயில் RGD மஹாலிலும், பகல் 12.00 மணிக்கு அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி பாகமுகவர்கள்(BLA2) ஆலோசனைக் கூட்டம் அணைக்கட்டு ஆனந்தா கஸ்தூரி திருமண மண்டபத்திலும், பிற்பகல் 03.00 மணிக்கு குடியாத்தம் சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள்(BLA2) ஆலோசனைக்கூட்டம் குடி யாத்தம், ஏரிக்கரை JS கிராண்ட் மஹாலிலும், மாலை 6.00 மணிக்கு காட்பாடி சட்டமன்ற தொகுதி பாகமுகவர்கள்(BLA2) ஆலோசனைக் கூட்டம் காட்பாடி, சித்தூர் பேருந்து நிறுத்தம், NVT நாராயண நாடார் திருமண மண்டபத்திலும் நடைபெற உள்ளது.

எனவே, அந்தந்த தொகுதிகளுக்கு உட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், தலைமைக்கழக சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA2), ஆகியோர்கள் தவறாமல் ஆலோசனைக்கூட்டத்தில் கலந்துகொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு வேலூர் மாவட்ட செயலாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ தனது அறிக்கையின் வாயிலாக வேண்டுகோள் விடுத்து ள்ளார்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் இல்லங்கள் தோறும் ஸ்டாலினின் குரல்திண்ணைப் பிரச்சாரம் தச்சநல்லூர் பகுதி 1வது வார்டில் மாவட்ட துணை துணை செயலாளர் சுரேஷ் தச்சை பகுதி செயலாளர் பூ.சுப்பிரமணியன் ஆகியோர் மேற்பார்வையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன் கான், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயகுமார் ஆகியோர் பங்கேற்று திண்ணை பிரச்சாரத்தை மேற்கொண்டு துவக்கி வைத்தனர். நிகழ்வில் மேயர் சரவணன், துணை மேயர் ராஜ்,இளைஞர் அணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், துணை அமைப்பாளர் மீரான்மைதீன், அருண்குமார், மீரான், கோகுலவாணி, டாக்டர் சங்கர், சுந்தர், ரம்சான் அலி, நித்திய பாலையா, இசக்கி பாண்டியன், மாரியப்பன், ரத்தின பாலா, ரேவதி அசோக் சித்திரா, தேவிகா, அருணாச்சல தேவி, கந்தசாமி ரவி, முத்துசாமி, பொன்பாண்டி, சி.பா.முருகன், செண்டு, சூப்பர் மணி, குருநாதன், ஆட்டோ அழகு, பால் இசக்கி, மாசாணம், நெல்லையப்பன், பிரகாஷ், மார்க்கெட் நைனார், கே.டி.சி பேச்சிமுத்து, குமஸ்தா ராஜ், ஆறுமுகம், இசக்கி, தங்கராஜ், முத்துராமன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் மறைந்த சட்டப்பேரவை முன்னாள் தலைவர் பண்பாளர் பி.டி.ஆர்.பழனிவேல் ராஜன் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய போது எடுத்த படம். உடன் கழக நிர்வாகிகள் வ.வேலுசாமி, பெ.குழந்தை வேலு, மேயர் இந்திராணி பொன் வசந்த், மா.ஜெயராம் கழக நிர்வாகிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர்.